# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109750

1. District : மாவட்டம் Tirunelveli | PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption | Year: ஆண்டு 2022 | FIR No.: மு.த.அ. எண் 09/2022 | Date நாள் 26.12.2022

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Act 16 of 2018 — Sections பிரிவுகள்: 7 (a)

   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 23.12.2022 12.30 hrs — Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.12.2022 — Time : நேரம் 08.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — O/o Village Administrative Officer, Palayamchettikulam @ Samathanapuram Tirunelveli District. 3 Km North East.

   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் N.THANGAPANDI — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் NARAYANAN

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 10.01.1989 — (d) Nationality : நாட்டினம் INDIAN — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Coolie — (g) Address : முகவரி 206 Prabhu Nagar Extension, Lourdhu Annai Nagar, Palayamchettikulam, Tirunelveli District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr.Subramanian, Village Administrative Officer, Palayamchettikulam, Palayamkottai Taluk, Tirunelveli District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   No delay.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 26.12.2022-ம் தேதி காலை 08.00 மணிக்கு நான் திருமதி.C.S.சாந்தி நிலைய பொறுப்பில் இருக்கும்போது திரு.N.தங்கப்பாண்டி என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை தாலுகா, பாளையஞ்செட்டிகுளம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரியும் திரு.சுப்பிரமணியன் பற்றியும் ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 26.12.2022-ம் தேதி காலை 09.30 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.09/2022 u/s 7(a) of the PC Act 1988 as amended by Act 16 of 2018 என வழக்குப் பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் நா.தங்கப்பாண்டி, த/பெ நாராயணன், 206, பிரபு நகர் விரிவாக்கம், லூர்து அன்னை நகர், பாளையஞ்செட்டிகுளம், திருநெல்வேலி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, திருநெல்வேலி மாவட்டம். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் வண்ணாரப்பேட்டை பகுதியில் தள்ளுவண்டியில் பானிபூரி கடை வைத்து பிழைப்பு நடத்தி வருகிறேன். திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

N. தங்கப் பாண்டி 26/12/2022

C.S. [signature] 26/12/22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
26.12.22 at 09.45hrs.

Name: பெயர் C.S. SANTHI
Rank: நிலை Inspector of Police No. எண்
V&AC, Tirunelveli.

தாலுகா, பாளையஞ்செட்டிகுளம் கிராமத்தில் ப்ளாட் எண் 205 ல் 2.75 செண்ட் என் பெயரிலும் மற்றும் 206 ல் 2.75 செண்ட் எனது மற்றும் எனது மனைவி சந்தனப்பிரியா பெயரில் கூட்டாகவும் ஆக மொத்தம் 5.5 செண்ட் நிலம் உள்ளது. அந்த இடத்திற்கு நான் எங்களது பெயரில் தனிப்பட்டா கேட்டு 05.12.2022 அன்று பாளையங்கோட்டை வார்டு அலுவலகத்தில் உள்ள இ-சேவை மையத்தில் தனித்தனியே ஆன்லைன் மூலம் வட்டாட்சியர் பாளையங்கோட்டை அவர்களுக்கு விண்ணப்பித்திருந்தேன். மேற்படி ஆன்லைன் விண்ணப்ப எண் 2022/0105/29/237639 மற்றும் 2022/0105/29/237633 ஆகும். இந்நிலையில் 22.12.2022 அன்று மாலை சுமார் 4 மணியளவில் எனது செல்போன் எண்ணான 8248865828 க்கு 9942122335 என்ற எண்ணிலிருந்து ஒரு அழைப்பு வந்தது. நான் மேற்படி அழைப்பை எடுத்து பேசும்போது, எதிர் முனையில் பேசிய நபர் தான் பாளையஞ்செட்டிகுளம் கிராம நிர்வாக அலுவலர் என்றும் உங்களது பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டி ஆன்லைனில் கொடுத்த விண்ணப்பம் குறித்து விசாரிக்க வேண்டும் என்றும் சொல்லி மறுநாள் அதாவது 23.12.2022 அன்று காலை சுமார் 12 மணிக்கு பாளையஞ்செட்டிகுளம் கிராம நிர்வாக அலவலகத்திற்கு மேற்படி இடத்திற்கான பத்திரநகல், வில்லங்க சான்று, மூலப்பத்திரம் போன்றவற்றை கொண்டு வரச்சொன்னார். அதன் பேரில் நான் 23.12.2022 அன்று அவரிடம் தொடர்பு கொண்டு, அவரது அலுவலகம் இருக்கும் இடத்தை அவரிடம் கேட்டு தெரிந்துகொண்டு சுமார் 12.30 மணிக்கு சமாதானபுரத்தில் உள்ள பாளையஞ்செட்டிகுளம் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு நேரில் சென்று அங்கிருந்த கிராம நிர்வாக அலுவலரிடம் என்னை அறிமுகப்படுத்திக்கொண்டேன். அப்போது அவர் என்னிடம், தனிப்பட்டா பெயர் மாற்றம் செய்து தர ஏற்பாடு செய்து தருவதற்கு தனக்கு ஒரு ப்ளாட்டிற்கு ரூ.5,000 வீதம் ரூ.10,000 லஞ்சமாக பணம் கேட்டார். நான் கூலி வேலைதான் செய்து வருகிறேன் அதனால், என்னால் அவ்வளவு பணம் தரமுடியாது என்று சொன்னதன் பேரில் வி.ஏ.ஓ. ரூ.2,000 குறைத்துக்கொண்டு ரூ.8,000 பணம் மட்டும் தரும்படி கேட்டார். நான் வங்கியில் பொருளை வைத்துதான் பணம் தரவேண்டும் என் கையில் பணம் இல்லை என்று சொன்னேன். பின் வேறு வழியின்றி சரி என்று சொல்லிவிட்டு, 2 நாட்களில் பணம் ஏற்பாடு செய்துவிட்டு திங்கள்கிழமை வருவதாக கூறிவிட்டு வந்துவிட்டேன். வி.ஏ.ஓ அலுவலகத்திற்கு வெளியில்வந்து விசாரிக்கும் போது மேற்படி கிராம நிர்வாக அலுவலரின் பெயர் திரு.சுப்பிரமணியன் என தெரிந்து கொண்டேன். பின் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்த போது அரசு வேலையை செய்வதற்கு என்னிடம் லஞ்சமாக பணம் கேட்கிறாரே என்று என் மனம் சங்கடப்பட்டது. எனக்கு லஞ்சமாக கிராம நிர்வாக அலுவலருக்கு பணம் கொடுக்க விருப்பமில்லை. அவர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.8,000 நான் வைத்துள்ளேன். என்னிடம் லஞ்சம் கேட்கும் பாளையஞ்செட்டிகுளம் கிராம நிர்வாக அலுவலர் திரு.சுப்பிரமணியன் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். தேதி 26.12.22. இப்படிக்கு, sd தங்கப்பாண்டி.

Sir, Received the complaint of Tr.Thangapandi on 26.12.2022 at 08.00 hrs, conducted confidential enquiry and obtained oral permission from Superintendent of Police, Southern Range, DVAC, Chennai and I registered a

case in Tirunelveli V&AC Cr.No.09/2022 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by Act 16 of 2018 on 26.12.2022 at 09.30 hrs. sd.Tmt.C.S.Santhi, Inspector of Police, V&AC, Tirunelveli.

இந்த வழக்கின் அசல் FIR, அசல் புகார் மனுவை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

C.S. 26/12/22

C.S. SANTHI
Inspector of Police
V&AC, Tirunelveli.